**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.173/2013**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு டிசம்பர் மாதம் 01 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : உலகநாதன் | மதம் | : இந்து |
| த/பெ | : ஏகாம்பர முதலி | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : புஜ்ஜிரெட்டிபள்ளி |
| தொழில் : | விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**01.12.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 3 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தமிழ் நன்றாக படிப்பேன் என்றால் சரிதான். வழக்கு விவரங்கள் அனைத்தும் எனக்கு நன்றாக தெரியும் என்றால் தெரியும். வழக்கு புல எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும். புல எண்.96/12, விஸ்தீரணம் 78 செண்ட் ஆகும். வழக்கு தாக்கல் செய்த P.V. ஏகாம்பர முதலி எனக்கு என்ன உறவு என்றால் எனது அப்பா ஆவார். என் அம்மா இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தாயார் இறந்த பின்பு 3 முதல் 10 வரை வாதிகளான நாங்கள் வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் ஆமாம். ஆதியில் என்ன வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். என் அப்பா யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் நடராஜன், முருகேசன் மீது தாக்கல் செய்தார்.

2. நடராஜன், முருகேசன் மீது என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் தகராறு செய்ய கூடாது என்று வழக்கு தாக்கல் செய்தார். நடராஜன், முருகேசன் ஆகியோர் எந்த ஊர் என்றால் புஜ்ஜிரெட்டிபள்ளி ஆகும். ஏழுமலை முதலிக்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால் 3 நபர்கள் ஆவார்கள். நடராஜன், முருகேசன், விநாயகம் ஆவார்கள். நடராஜன், முருகேசனை மட்டும் வழக்கில் சேர்த்துள்ளதற்கு காரணம் சொல்ல முடியுமா என்றால் விநாயகம் இறந்துவிட்டார். எனவே அவர்கள் இருவர் மீது மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ஏழுமலை

முதலிக்கு பெண் வாரிசுகள் இல்லையா என்றால் ஒரு மகள் உள்ளார். ஆனால் அவர் எங்கு உள்ளார் என்பது தெரியாது. ஏழுமலையின் வாரிசுகளான விநாயகம் மட்டும் பெண் வாரிசை சேர்க்காமல் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

3. என் அப்பா தாக்கல் செய்த வழக்கின் விவரங்கள் அனைத்தும் படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நடராஜன், முருகேசன் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரியும். சிவலிங்கம், வேதாசலம், கண்ணன், ரமேஷ், தெய்வயாணையம்மாள், அருணகிரி ஆகியோர்களை ஏன் வழக்கில் சேர்த்தோம் என்றால் அவர்களை நடராஜன் ஏவிவிட்டதால் அவர்களை இந்த வழக்கில் சேர்த்தோம். சிவலிங்கம், வேதாசலம், கண்ணன், ரமேஷ், தெய்வயாணையம்மாள், அருணகிரி ஆகியோர்கள் எந்த தேதியில் தகராறு செய்தார்கள் என்று தேதி குறிப்பிட்டு பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும்போது எத்தனை ஆவணங்களை தாக்கல் செய்தோம் என்று ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை.

4. 15.12.1999ம் தேதியிட்ட அசல் ஆவணங்களை நீதிமன்றத்தில் இருந்து திரும்ப பெற்றுவிட்டேன் என்றால் இல்லை. நீதிமன்றத்தில்தான் உள்ளது. இடைமனு எண்.1/2019 உத்தரவின்படி 15.12.1999ம் தேதியிட்ட அசல் ஆவணங்களை நீதிமன்றத்தில் இருந்து திரும்ப பெற்றுவிட்டேன் என்றால் அந்த சமயம் என் அப்பாதான் வழக்கு நடத்தி வந்தார். என்ன காரணத்திற்காக என் அப்பா 15.12.1999ம் தேதியிட்ட அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் இருந்து திரும்ப பெற்று கொண்டார் என்பதை சொல்ல முடியுமா என்றால் தெரியாது. ஆதியில் சொத்து முருகேச முதலியாரின் பெரியப்பா நடேச முதலியாருக்கு சொந்தமாக இருந்தது என்பது தெரியுமா என்றால் தெரியாது. எனது பிராதில் சொத்து நடேச முதலியாருக்கு பாகப்பிரிவினையின் மூலம் சொத்து வந்ததாக கூறியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)